செ.வெ.எண்: 188 நாள்: 25.03.2021

**சட்டமன்ற தேர்தல் கண்காணிப்பு குழுவில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுடன் காணொலிகாட்சி வாயிலாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் 6 சட்டமன்ற தொகுதிகளில் பணியாற்றும் தேர்தல் பறக்கும் படை உள்ளிட்ட பணிகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் புதுக்கோட்டை கோட்டாட்சியர் அலுவலகத்தில் இன்று (25.03.2021) காணொலிகாட்சி மூலம் ஆய்வு மேற்கொண்டார். பின்னர் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

6.04.2021 அன்று நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலையொட்டி புதுக்கோட்டை மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதற்கென தேர்தல் பொது பார்வையாளர்கள், தேர்தல் செலவின பார்வையாளர்கள் மற்றும் காவல் துறை பார்வையாளர்கள் வருகைபுரிந்து மாவட்டத்திலுள்ள 6 சட்டமன்ற தொகுதிகளையும் கண்காணித்து வருகின்றனர்.

மாவட்டத்தில் ஏற்கனவே 8 பேர் கொண்ட நிலையான கண்காணிப்புக்குழு, வீடியோ கண்காணிப்புக்குழு செயல்பட்டு வருகிறது. இக்குழுவில் தற்பொழுது கூடுதலாக 12 பேர் சேர்த்து மொத்தம் 20 அலுவலர்கள் தேர்தல் தொடர்பான கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். குறிப்பாக இக்குழுவில் இடம் பெற்றுள்ள பறக்கும் படையினர் தங்கள் எல்லைகளுக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் விடுபடாமல் சுழற்சி முறையில் ஆய்வு பணியினை மேற்கொள்ள அறிவுருத்தப்பட்டுள்ளது.

ஆவணமின்றி எடுத்து வரப்படும் பணம் உள்ளிட்ட பொருட்கள் பிடிபடும் போது அது குறித்த தகவல்களை உடனடியாக தேர்தல் பார்வையாளர்கள், மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும்

தொடர்புடைய சட்டமன்ற தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு தெரியப்படுத்திட அறிவுருத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது கோட்டாட்சியர் டெய்சிகுமார், துணை ஆட்சியர் (பயிற்சி) சுகிதா, வட்டாட்சியர் முருகப்பன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**